### தீமோத்தேயு 1 2:5

சர்வேசுரன் ஒருவரே; சர்வேசுர னுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே; இவரே மனுஷனான சேசுக் கிறீஸ்துநாதர். மூ 5. ஆயினும் சர்வேசுரனிடத்தில் நமக்குச் சகல நன்மைகளையும் பெறுவித்து நம்மை இரட்சிக்கிற சேசுக்கிறீஸ்துநாதராகிய ஒரே மத்தியஸ்ர் உண்டென்றாலும், சர்வேசுர னையும், நம்முடைய ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதரையும் நமக்காக மன்றாடுகிறவர்களாகிய அநேக மத்தியஸ்தர்கள் பூலோகத்திலும் மோட்சத்திலும் இருப்பது குறையல்ல.

### உரோமாபுரியார் 1 8:38-39

ஏனெனில் சாவானாலும், ஷஜீவ னானாலும், தேவதூதரானாலும், சத்து வகரானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், பராக்கிரமமானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய ஆண்டவராகிய சேசுக் கிறீஸ்துநாதர்மேல் நமக்குள்ள தேவ சிநேகத்தைவிட்டு நம்மை விலக்க முடியாதென்று எனக்கு நிச்சயமா யிருக்கிறது.

### எபிரேயருக்கு எழுதிய நிருபம் 9:15

(கடவுளால்) அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தைப் பெற றுக்கொள்ளும்பொருட்டு முந்தின உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களைப் பரிகரிக்கும்படி தாம் அடைந்த மரணத்தால் புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராய் இருக்கிறார். (கலாத். 3:15; 1 தீமோ. 2:5.)

### அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 17:15

தேவரீர் அவர்களை உலகத்தினின்று எடுத்துக்கொள்ளும்படிக்கு நான் வேண்டிக்கொள்ளாமல், தின்மையினின்று அவர்களைக் காப்பாற்றும்படி (வேண்டிக்கொள்ளுகிறேன்).

### கொரிந்தியர் 2 5:21

அவரிடமாய் நாம் சர்வேசுரனுடைய நீதியாகும்படிக்குச் சர்வேசுரன் பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். மூமூமூ 21. பாவமாக்கினாரென்பதற்குப் பாவப்பலியாக்கினாரென்பது கருத்து. ஏனெனில் எபிரேய பாஷையில் பாவப்பரிகாரமாக ஒப்புக்கொடுக்கப்படுகிற பலியைப் பாவமென்றுசொல்வது வழக்கமாம்.

### எபிரேயருக்கு எழுதிய நிருபம் 8:6

இப்பொழுதோ, மேன்மையான வாக்குத்தத்தங்களால் உறுதியாக்கப்பட்டிருக்கிற மேலான உடன்படிக்கைக்கு இவர் எப்படிப்பட்ட மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அவ்வளவுக்கு மேலான குருத்துவ ஊழியத்தை அடைந்திருக்கிறார்.

## அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 14:6

சேசுநாதர் அவரை நோக்கி: வழியும், சத்தியமும், ஷஜீவனும் நானே. என் வழியாய் அல்லாதே பிதாவினிடத்தில் சேருகிறவன் ஒருவனுமில்லை.